DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மாரிச்சாமி | Father/Husband Name : பிச்சை |
| Age : 47 | Village : தாயில்பட்டி |
| Taluk : | Calling : டிரைவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Jan 5, 2026 11:28 AM

(Accused not Present. E-petition under Section 317 CrPC filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் தாயில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி செல்வமணியை எனக்கு தெரியும். அவர் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறார். எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அதை சுமார் 6 அல்லது 7 ஆண்டுகளுக்கு முன்னர் தாயில்பட்டி கூட்டுறவு வங்கிக்கு எதிர் புறம் வைத்து போலீசார் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கு இனங்க நான் போட்டுக்கொடுத்தேன். அப்பொழுது அந்த இடத்தில் போலீசார் தவிர யாரும் அங்கு இல்லை. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி, அவ்வாறே அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் படித்து காண்பித்தார்களா இல்லை. இவ்வழக்கின் எதிரி செல்வமணி எனது பக்கத்து ஊர்க்காரர் என்றால் சரிதான். கடந்த 31.01.2017 ம் தேதி மதியம் 03.00 மணிக்கு போலீசார் இவ்வழக்கின் எதிரி செல்வமணி என்பவரை கைது செய்த போது எதிரியிடமிருந்து பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்து விட்டு தற்போது எதிரி தெரிந்த நபர் என்பதால் அவரை இவ்வழக்கில் இருந்து காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

3. போலீசார் என்னிடம் எழுதாத தாளில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Jan 5, 2026 11:34 AM

Judicial Magistrate 2, Sattur